இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
பாராளுமன்றம்

1998 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, ஸ்ரம வாசனா நிதியச் சட்டம்

(1998, மாச்சு மாதம் 31 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

1998, ஏப்பிறல் மாதம் 03 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை: ரூபா 7.25 தபாற் செலவு: ரூபா 2.50

1998 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, ஸ்ரம வாசனா நிதியச் சட்டம்

[1998 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 31 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]

ச. வ – ஒ 38/96

"ஸ்ரம வாசனா நிதியம்" என அழைக்கப்படுவதும் அறியப் படுவதுமான நிதியமொன்றைத் தாபிப்பதற்கும், ஊழியர் களின் நலம் பேணுதலுக்குப் பணம் வழங்குவதற்கு ஏற்பாடு செய்வதற்கும் அத்துடன் அதனோடு தொடர்புடைய அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளு மன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப்பெயர்.

1. இச்சட்டம் 1998 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, ஸ்ரம வாசனா நிதியச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

ஸ்ரம வாசனா நிதியத்தைத் தாபித்தல்.

2. (1) ஸ்ரம வாசனா நிதியம் என அழைக்கப்படும் நிதிய மொன்று தாபிக்கப்படுதல் வேண்டும். (இது இதனகத்துப் பின்னர் "நிதியம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்).

(2) நிதியம் (1) ஆம் உட்பிரிவால் அதற்குக் குறித்தொதுக்கப் பட்ட பெயரால் கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டும் என்பதுடன் இடையறாவழியுரிமையும் பொது இலச்சினையொன்றும் உடையதாதலும் வேண்டும். அத்துடன் அது அப்பெயரில் வழக்குத் தொடரலாம் என்பதுடன் அதற் கெதிராக வழக்குத் தொடரவும்படலாம்.

நிதியத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை.

3. (1) நிதியத்தின் நிர்வாகமும் முகாமைத்துவமும் கட்டுப் பாடும் இதனகத்துப்பின்னர் ஏற்பாடு செய்யப்பட்டவாறு அமைத்துருவாக்கப்படும் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை யொன்றிற்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும். (இது இதன கத்துப்பின்னர் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்).

(2) சபை, நிதியத்தின் அலுவல்களை நிர்வகிக்கும் நோக்கங்களுக்கு இச்சட்டத்தால் நிதியத்திற்குக் குறித்தொதுக்கப் பட்ட தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகித்தலும் நிறைவேற்றுதலும் புரிதலும் வேண்டும்.

(3) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, சபையானது, அதன் கூட்டங்கள், அக்கூட்டங்களில் நிறைவேற்றப்படும் அலுவல் என்பன தொடர்பில் நடவடிக்கைமுறையை ஒழுங்குபடுத்து வதற்கு விதிகளை ஆக்கும் தத்துவமுடையதாதல் வேண்டும்.

2-ஏ- 047287 - 1,100 (98/01)

சபையின் அமைப்பு.

4. (1) சபை பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும்:—

(அ) தொழில் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர்; (இதனகத்துப்பின்னர் "தவிசாளர்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இவர் சபையின் தவிசாளராக இருத்தல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சின் அமைச்சருடனான கலந்தாலோசனையுடன் அமைச்சரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சின் பிரதிநிதி ஒருவர் ;

(இ) அமைச்சரினால் நியமிக்கப்படும் நான்கு ஆட்கள் (இவர்கள் இதனகத்துப்பின்னர் "நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்" எனக் குறிப்பீடு செய்யப்படுவர்.) ;

(2) (அ) நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒவ்வொருவரும் இறப்பினால், பதவி விலகலினால் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதனால் முன்னரே அவர் பதவியை வறிதாக்கினாலன்றி, அத்தகைய பதவிக்கு அவரது நியமனத் திகதியிலிருந்து மூன்று ஆண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்கு பதவி வகித்தல் வேண்டும் ;

(ஆ) நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒவ்வொருவரும் பதவி விலகல் தொடர்பாக அமைச்சருக்கு முகவரியிட்டெழுதப்பட்ட கடிதமொன்றின்மூலம் அவரது பதவியை விட்டு விலகலாம் என்பதுடன் அத்தகைய அமைச்சரால் அது ஏற்றுக்கொள்ளப்படுவதன் மீது அத்தகைய பதவி விலகல் பயனுறுதலும் வேண்டும் ;

(இ) அமைச்சரானவர் நியமிக்கப்பட்ட உறுப்பினர் எவரையும் காரணம் எதுவும் காட்டாமல் பதவியிலிருந்து அகற்றலாம் ;

(ஈ) சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர் எவரும் சுகவீனம் காரணமாக அல்லது வேறு பலயீனம் காரணமாக அல்லது இலங்கையில் இல்லாதிருப்பதன் காரணமாக அவரது பதவிக்குரிய கடமைளை தற்காலிகமாக நிறைவேற்ற இயலாதிருக்குமிடத்து, அவரது இடத்திற் செயலாற்றுவதற்கென அமைச்சர் வேறோர் ஆளை நியமிக்கலாம் ;

(உ) நியமிக்கப்பட்ட உறுப்பினர் எவரும் இறக்கின்றவிடத்து, பதவி விலகுமிடத்து அல்லது பதவியிலிருந்து அகற்றப் படுமிடத்து, அவரது இடத்திற்கு அமைச்சர் வேறோர் ஆளை நியமித்தல் வேண்டும் என்பதுடன் அவ்வாறு நியமிக்கப்பட்ட ஆள் அவர் எந்த உறுப்பினரைப் பின்னுறுகின்றாரோ அந்த உறுப்பினரின் பதவிக்காலத்தின் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்குப் பதவிவகித்தலும் வேண்டும் ;

(ஊ) கால விரயத்தினால் பதவியை வறிதாக்கும் நியமிக்கப் பட்ட உறுப்பினர் ஒருவர் மறுநியமனத்திற்குத் தகுதியுடைய வராதல் வேண்டும்.

(3) (அ) தவிசாளர் சபையின் ஒவ்வொரு கூட்டத்திற்கும் தலைமைதாங்குதல் வேண்டும். சபையின் ஏதேனும் கூட்டத்தில் தவிசாளர் சமுகமாயிராதவிடத்து, அத்தகைய கூட்டத்தில் சமுகமாயிருக்கும் உறுப்பினர்களுள் பெரும்பான்மையோரால் தெரிவுசெய்யப்படும் உறுப்பினர் ஒருவர் அத்தகைய கூட்டத்திற்குத் தலைமை தாங்குதல் வேண்டும் ;

(ஆ) சபையின் ஏதேனும் கூட்டத்திற்கான கூட்ட நடப்பெண் மூன்று உறுப்பினர்களாதல் வேண்டும் ;

(இ) உறுப்பாண்மையில் ஏதேனும் வெற்றிடம் இருப்பதைப் பொருட்படுத்தாமல் செயலாற்றும் தத்துவம் சபைக்கிருத்தல் வேண்டும். சபையின் ஏதேனும் செயல் அல்லது நடவடிக்கை, அத்தகைய வெற்றிடம் உளது என்ற அல்லது உறுப்பினரின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு உளது என்ற காரணத்தினால் மட்டும் செல்லுபடியற்றதாகக் கருதப்படுதலாகாது.

(4) ஆளொருவர் —

(அ) பாராளுமன்ற உறுப்பினரொருவராக அல்லது மாகாணசபையின் அல்லது உள்ளூரதிகாரசபையின் உறுப்பினரொருவராக இருப்பின் அல்லது உறுப்பினரொருவராகவரின் ; அல்லது

(ஆ) இலங்கையில் அல்லது வேறு ஏதேனும் நாட்டில் வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின்கீழ் சித்தசுவா தீனமற்றவராகக் காணப்படின் அல்லது வெளிப் படுத்தப்படின் ;

(இ) இலங்கையில் அல்லது வேறேதேனும் நாட்டில் வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின்கீழ் கடனிறுக்க வகையற்றவர் அல்லது வங்கி முறிந்தவர் என வெளிப்படுத்தப்பட்டு, விடுவிக்கப்படாத கடனிறுக்க வகையற்ற ஒருவராக அல்லது வங்கி முறிந்த ஒருவராக இருப்பின் ;

(ஈ) இலங்கையில் அல்லது வேறேதேனும் நாட்டிலுள்ள ஏதேனும் நீதிமன்றத்தால் விதிக்கப்பட்ட மறியற் றண்டனைத் தீர்ப்பொன்றை அனுபவிக்கின்றவராயின் அல்லது அனுபவித்திருக்கின்றவராயின்,

அவர் சபையின் உறுப்பினரொருவராக நியமிக்கப்படுவதினின்று அல்லது பதவியில் தொடர்ந்திருப்பதினின்று தகைமையிழந்தவராதல் வேண்டும்.

நிதியத்தின் இலச்சினை.

5. (1) (இதனகத்துப்பின்னர் "இலச்சினை" எனக்குறிப்பீடு செய்யப்படும்) சபையின் இலச்சினை சபையால் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஆட்களின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும்.

(2) இலச்சினையானது, சபையின் அனுமதியுடனும் சபையின் இரண்டு உறுப்பினர்களின் முன்னிலையிலும் தவிர சாதனம் அல்லது ஆவணம் எதிலும் பொறிக்கப்படுதலாகாது. இவர்கள் தாங்கள் சமுகமாயிருந்தமைக்கு அடையாளமாக அத்தகைய சாதனத்தில் அல்லது ஆவணத்தில் கையொப்பமிடுதல் வேண்டும்.

(3) இலச்சினை, சபையால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றப்படலாம்.

(4) எந்தச் சாதனங்களில் அல்லது ஆவணங்களில் இலச்சினை பொறிக்கப்பட்டுள்ளதோ அந்தச் சாதனங்களின் அல்லது ஆவணங்களின் பதிவேடு ஒன்று சபையால் பேணப் படுதல் வேண்டும்.

நிதியத்தின் குறிக்கோள்கள்.

6. நிதியத்தின் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும் :—

(அ) ஊழியர்களின் நலம் பேணலை ஊக்குவித்தல் ;

(ஆ) ஊழியர்களுக்கு, அவர்கள் வேலை செய்யும் நிறுவனங்கள் முன்னறிவித்தலின்றி மூடிவிடப்படுமிடத்து நிதிசார்ந்த உதவியையும் அத்துடன் வேறு உதவியையும் புரிதல் ;

(இ) அவசரகால நேரங்களில் ஊழியர்களுக்கு மருத்துவ வசதிகளையும் வேறு வசதிகளையும் வழங்குதல் ;

(ஈ) ஊழியர்களுக்கு, அவர்களுக்கெதிராக விசாரணைகள் தொடரப்படுமிடத்து தற்காலிக உதவி வழங்குதல்;

(உ) இடர்ப்பாட்டின் நேரங்களில் ஊழியர்களுக்கு அல்லது அவர்களில் தங்கிவாழுநர்களுக்கு நிதிசார்ந்த நலன்களையும் வேறு நலன்களையும் வழங்குதல் ;

(ஊ) ஊழியர்களின் நலம்பேணலுக்கு சிறந்த சேவை ஆற்றியுள்ள ஆட்களுக்கு விருதுகள் வழங்குதல்.

சபையின் தத்துவங்களும் பணிகளும்.

7. (1) சபையானது, நிதியத்தின் பெயரில், நிதியத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு அவசியமான அல்லது உசிதமான அல்லது அதற்கு இடைநேர்விளைவான எல்லாக் காரியங்களையும் செய்வதற்குத் தத்துவமுடையதாதல் வேண்டும்.

(2) சபையானது, (1) ஆம் உட்பிரிவினால் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றி பின்வரும் தத்துவங்களையுடையதாதல் வேண்டும் :–

(அ) தேசிய லொத்தர் சபையால் "ஸ்ரம வாசனா" என்றழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான லொத்தர் ஒன்றை நடத்துவதற்கு ஏற்பாடு செய்தல் ;

(ஆ) நிதியங்களைத் திரட்டுதல், உள்ளூர் மூலவளங்களிலிருந்தாயினுஞ்சரி வெளியூர் மூலவளங்களிலிருந்தாயினுஞ்சரி, பணமாக அல்லது பொருளாக மானியங்களை, நன்கொடைகளை அல்லது கொடைகளைப் பெற்றுக்கொள்ளுதல் ;

(இ) கொள்வனவுகள், மானியம், நன்கொடை, விருப்பாவணக்கொடை என்ற வகையில் அல்லது வேறு வகையில் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளுதலும் வைத்திருத்தலும் ;

(ஈ) அத்தகைய ஏதேனும் ஆதனத்தை விற்றல், ஈடு வைத்தல், குத்தகைக்கு விடுதல், அளித்தல், உரித்து மாற்றுதல், விருப்பாவணமெழுதிக் கொடுத்தல், சாட்டுதல் செய்தல், கொடுத்து மாற்றுதல் அல்லது வேறுவகையில் கையுதிர்த்தல் ;

(உ) அதன் தத்துவங்களைத் தகுந்தவாறு பிரயோகிப்பதற்கும் அதன் பணிகளைப் புரிவதற்கும் நிதியத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கும் அவசியமாகக்கூடியவாறான எவையேனும் அத்தகைய ஒப்பந்தங்களைச் செய்துகொள்ளுதலும் நிறைவேற்றுதலும் ;

(ஊ) அதன் அலுவல்களையும் சேவையாளர்களையும் நியமித்தலும் அவர்களின் நியமனத்தை முடிவுறுத்தலும், அவர்கள்மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகித்தலும் ;

(எ) நிதியத்திற்குரிய அல்லது அதனால் வைத்திருக்கப்படும் ஏதேனும் காணியின்மீது ஏதேனும் கட்டிடத்தை அல்லது கட்டுமானத்தை நிறுவுதல் அல்லது நிறுவச் செய்வித்தல் ;

(ஏ) நிதியத்திற்குரிய பணத்தை சபையின் தற்றுணிபின் பேரில் முதலீடு செய்தலும் அத்தகைய முதலீட்டிலிருந்து திரளும் வருமானத்தைச் சேகரித்தலும் ;

(ஐ) வங்கிக் கணக்குகளை ஆரம்பித்தலும் நடைமுறைப் படுத்துதலும் முடித்துக்கொள்ளுதலும் அத்துடன் நிதியத்தின் நோக்கங்களுக்கென பிணைப்பொறுப்புடனாயினுஞ்சரி அல்லாமலுஞ்சரி பணத்தைக் கடனெடுத்தலும் அல்லது திரட்டுதலும் ;

(ஒ) நிதியத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு இடைநேர்விளைவான அல்லது உகந்தனவான அத்தகைய எல்லா வேறு செயல்களையும் காரியங்களையும் செய்தல்.

சபைக்கு அமைச்சரின் பணிப்புக்கள்.

8. அமைச்சரானவர் சபையின் தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கும் பணிகளை நிறைவேற்றுவதற்குமாக, சபைக்கு எழுத்தில், அத்தகைய பொது பணிப்புக்களைத் தரலாம் என்பதுடன் சபையானது, அத்தகைய ஒவ்வொரு பணிப்புக்கும் பயனுறுத்தலை அளித்தல் வேண்டும்.

நிதியின் செயற்பாடுகளை நுண்ணாய்வு செய்வதற்கு அமைச்சரின் தத்துவம்.

9. அமைச்சரானவர், காலத்திற்குக்காலம், அத்தகைய கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட, அத்தகைய காலத்தினுள், குறித்துரைக்கக்கூடியவாறான அத்தகைய ஆள் அல்லது ஆளினால், நிதியத்தின் எல்லா அல்லது எவையேனும் செயற்பாடுகள் நுண்ணாய்வு செய்யப்படவேண்டுமென அல்லது விசாரணை செய்யப்படவேண்டுமென அத்துடன் அறிக்கை செய்யப்படவேண்டுமென எழுத்தில் கட்டளையிடலாம் என்பதுடன் அத்தகைய கட்டளை செய்யப்பட்டதன்மேல் சபையானது, அத்தகைய பணித்தல்களுக்கு, பயனுறுத்தலையளிப்பதற்கு, அத்தகைய ஆள் அல்லது ஆட்களுக்குத் தேவைப்படக்கூடியவாறான அத்தகைய வசதிகளை அளித்தலும் அத்தகைய எல்லாத் தகவலையும் கொடுத்துதவுதலும் வேண்டும்.

நிதியத்திற்குச் செய்யப்படும் கொடுப்பனவு.

10. நிதியத்திற்குப் பின்வருவன செலுத்தப்படுதல் வேண்டும் :—

(அ) நிதியத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றும் நோக்கத்திற்கென பாராளுமன்றத்தினால் காலத்திற்குக்காலம் வாக்களிக்கப்படக்கூடியவாறான அத்தகைய பணத்தொகை யாவும் ;

(ஆ) உள்நாட்டு அல்லது வெளிநாட்டு மூலத்திலிருந்து மானியக்கொடைகள், கொடைகள் அல்லது நன்கொடைகளாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட பணத்தொகைகள் யாவும் ;

(இ) நிதியத்தினால் செய்யப்பட்ட முதலீட்டிலிருந்து, வருவாயாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட பணத்தொகை யாவும் ; அத்துடன்

(ஈ) பதின்மூன்றாம் பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட லொத்தர் விற்பனை வரவுகள் உட்பட இச்சட்டத்தின்கீழ் தத்துவங்களைப் பிரயோகிப்பதில் அத்துடன் அதன் பணிகளை நிறைவேற்றுவதில் நிதியத்தினால் பெறப்பட்ட பணத்தொகை யாவும்.

நிதியத்திலிருந்து செய்யப்படும் கொடுப்பனவு.

11. நிதியத்திலிருந்து பின்வருவன செலுத்தப்படுதல் வேண்டும் :–

(அ) நிதியத்தைத் தாபித்தல் அத்துடன் பேணுதல் வேலைகளில் உறப்பட்ட செலவுகளைச் செலுத்துவதற்கு அவசியமானவாறான எல்லாப் பணத்தொகைகளும்;

(ஆ) நிதியத்தின் அலுவலர்களுக்கும் சேவையாளர்களுக்குமான சம்பளக் கொடுப்பனவிற்கு அவசியமான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ;

(இ) நிதியத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றும் நோக்கத்திற்கு அவசியமாகக்கூடியவாறான சபையினால் அங்கீகரிக்கப்பட்டவாறான அத்தகைய கொடுப்பனவுகளைச் செலுத்துவதற்கு அவசியமானவாறான அத்தகைய எல்லாத் தொகைகளும்.

கணக்குகளும் கணக்காய்வும்.

12. (1) சபையானது, அதன் வருமானம், செலவினம், சொத்துக்கள் அத்துடன் . பொறுப்புக்கள் என்பனபற்றியும் நிதியத்தின் வேறு எல்லாக் கொடுக்கல்வாங்கல்களும் பற்றியும் முறையான கணக்குப் புத்தகங்களை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

(2) வருமானம், அத்துடன் செலவினம் பற்றிய கணக்குகளும் ஐந்தொகையும் சபையினால் நிறைவேற்றப்பட்ட ஒரு தீர்மானத்தினால் அவ்வாறு செய்வதற்கு அதிகாரமளிக்கப்பட்ட சபையின் இரு உறுப்பினர்களினால் ஒப்பமிடப்படுதல் வேண்டும்.

(3) சபையின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(4) அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள் நிதியத்தின் கணக்குகளின் கணக்காய்விற்கு ஏற்புடையதாதல் வேண்டும்.

லொத்தர் சபையினால் நிதியத்திற்காக லொத்தர் சீட்டிழுப்புகளை நடாத்துதல்.

13. (1) இதனகத்துப்பின்னர் "லொத்தர் சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும் 1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச்சட்டத்தினால் தாபிக்கப்பட்ட தேசிய லொத்தர் சபை, நிதியத்திற்கும் லொத்தர் சபைக்குமிடையில் இணங்கிக் கொண்டவாறான ஒவ்வொரு ஆண்டிலும் அத்தகைய எண்ணிக்கையிலான ஏதேனும் வகையிலான லொத்தர் சீட்டிழுப்புக்களை நிதியத்திற்காக நடாத்துதல் வேண்டும்.

(2) அத்தகைய ஒவ்வொரு சீட்டிழுப்பும் ஒரு "ஸ்ரம வாசனா" என அழைக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் நிதியத்திற்கும் லொத்தர் சபைக்குமிடையிலான உடன் படிக்கையின்படி இணங்கப்பட்டவாறான அத்தகைய முறையில் நடாத்தப்படுதலும் வேண்டும். நிதியத்திற்கும் லொத்தர் சபைக்கு மிடையிலான உடன்பாடு சீட்டிழுப்பில் வழங்கப்படவேண்டிய பரிசுகள் தொடர்பானதும், அத்தகைய சீட்டிழுப்பில் கோரப்படாத பரிசுகள் கையாளப்படவேண்டிய முறை தொடர்பானதுமான ஏற்பாடுகளை உள்ளடக்குதலும் வேண்டும்.

(3) நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருடனான கலந்தாலோசனையுடன், நிதியத்திற்காக லொத்தர் சபையினால் நடாத்தப்படும் ஒவ்வொரு லொத்தரின் விற்பனை வருவாய்களும் லொத்தர் சபையினாலும், நிதியத்தினாலும் இணங்கிக்கொள்ளப்பட்டவாறான, அத்தகைய லொத்தர் சீட்டிழுப்பில் வழங்கப்படவேண்டிய பரிசுகளின் பெறுமதி உள்ளடங்கலாக அத்தகைய லொத்தர் சீட்டிழுப்பினை நடாத்துவதற்கான அத்தகைய செலவினம் கழிக்கப்பட்ட பின்னர், திரட்டிய நிதியத்திற்கு லொத்தர் சபையினால் செலுத்தப்படுதல் வேண்டும்.

(4) நிதியமானது, நிதியத்திற்காக, லொத்தர் சபையினால் நடாத்தப்படும் ஏதேனும் லொத்தர் சீட்டிழுப்பிலிருந்து அதற்குக் கிடைக்கப்பெற்ற ஏதேனும் வருமானம் அல்லது இலாபத்தின்மீதான, 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் கீழுள்ளவாறான ஏதேனும் வரிக்கொடுப்பனவிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

(5) லொத்தர் கட்டளைச்சட்டம் நிதியத்திற்காக லொத்தர் சபையினால் நடாத்தப்படும் ஏதேனும் லொத்தர் சீட்டிழுப்பிற்கு ஏற்புடையதாகமாட்டாது.

விதிகளை ஆக்குவதற்குச் சபைக்குள்ள தத்துவம்.

14. சபையானது, அதன் தத்துவங்களை, கடமைகளை அத்துடன் பணிகளைப் பிரயோகிப்பதை, நிறைவேற்றுவதை அத்துடன் புரிவதைப் பாதிக்கின்ற அல்லது அதனுடன் தொடர்புடைய அல்லது அதற்கு இடைநேர்விளைவான ஏதேனும் கருமம் தொடர்பாக அவசியமென அது கருதக்கூடியவாறான விதிகளை ஆக்கலாம்.

சில வரிகளிலிருந்து நிதியத்திற்கு விலக்களித்தல்.

15. (1) நிதியத்திற்கு எவரேனும் ஆளினால் பணமாக அல்லது வேறுவகையில் செய்யப்பட்ட ஒரு நன்கொடை, 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 31 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஆ என்னும் பந்தியின் நோக்கங்களுக்காக, அரசாங்கத்தினால் தாபிக்கப்பட்ட ஒரு நிதியத்திற்குப் பணமாகவோ அல்லது வேறுவகையாகவோ செய்யப்பட்ட ஒரு நன்கொடையாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) நிதியானது, 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின்கீழ் உள்ளடக்கப்பட்டதிலிருந்தும், அத்துடன் அதற்குப் பின்னரும், நிதியத்தின் இலாபமும் வருமானமும் 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின்கீழ், செலுத்தப்படற்பாலதான வருமானத்திலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

(3) இப்பிரிவின் ஏற்பாடுகள் 1978 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தில் முரணாக எது எவ்வாறு இருப்பினும் பயனுறுதல் வேண்டும்.

இச்சட்டத்தின் கீழ் எடுக்கப்படும் நடவடிக்கைக்குச் சபையின் உறுப்பினர்களுக்கான பாதுகாப்பு.

16. (1) இச்சட்டத்தின்கீழ் அல்லது சபையின் பணிப்பின்மீது நல்லெண்ணத்துடன் செய்யப்படும் அல்லது செய்ததாகக் கொள்ளப்படும் ஏதேனும் செயலுக்காக சபையின் எவரேனும் உறுப்பினருக்கு அல்லது நிதியத்தின் அலுவலருக்கு அல்லது சேவையாளருக்கு எதிராக துடர்ச்சி அல்லது குற்றவழக்கு எதுவும் தொடுக்கப்படுதலாகாது.

(2) ஏதேனும் நீதிமன்றத்துக்குமுன் நிதியத்தினால் அல்லது நிதியத்துக்கு எதிரான துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் உறப்பட்ட ஏதேனும் செலவுகள் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன், ஏதேனும் அத்தகைய துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் நிதியத்திற்குச் செலுத்தப்பட்ட அல்லது நிதியத்திற்குக் கிடைக்கப்பெற்ற ஏதேனும் செலவுகள் நிதியத்திற்கு வரவுவைக்கப்படுதலும் வேண்டும்.

(3) இச்சட்டத்தின்கீழ் அல்லது சபையின் பணிப்பின்மீது, அவரினால் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கருதப்பட்ட ஏதேனும் செயல் தொடர்பாக ஏதேனும் நீதிமன்றத்தின்முன் அவருக்கெதிராகக் கொண்டுவரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்டவாறான, ஏதேனும் அத்தகைய ஆளினால் உறப்பட்ட ஏதேனும் செலவுகள், அத்தகைய செயல் நல்ல எண்ணத்துடன் செய்யப்பட்டதென நீதிமன்றம் தீர்ப்பளித்தால் அத்தகைய துடர்ச்சி அல்லது குற்றவழக்கில் அவரினால் அத்தகைய செலவுகள் அறவிடப் பட்டாலன்றி நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

சபையின் உறுப்பினர் ஒருவரின் ஆதனத்திற்கு அல்லது ஆளுக்கெதிராக எழுத்தாணை எதுவும் வழங்கப் படுதலாகாது.

17. நிதியத்திற்கெதிராக கொண்டுவரப்படும் ஏதேனும் நடவடிக்கையில் சபையின் எவரேனும் உறுப்பினருக்கெதிராக ஆளுக்கு அல்லது ஆதனத்திற்கெதிராக எழுத்தாணை எதுவும் வழங்கப்படுதலாகாது.

நிதியமானது, இலஞ்சச் சட்டத்தின் கருத்திற்குள் அட்டவணைப் படுத்தப்பட்ட ஒரு நிறுவனமாகக் கருதப்படுதல் வேண்டும்.

18. நிதியமானது, இலஞ்சச் சட்டத்தின் கருத்திற்குள் அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றாக இருத்தல் வேண்டுமெனக் கருதப்படல் வேண்டுமென்பதுடன் அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்கப் பொருள்கொள்ளப் படுதலும் வேண்டும்.

நிதியத்தின் அலுவலர்களும் சேவையாளர்களும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படல் வேண்டுமென்பது.

19. நிதியத்தின் எல்லா அலுவலர்களும் சேவையாளர்களும் தண்டனைச் சட்டக்கோவையின் கருத்திற்குள்ளும் அதன் நோக்கங்களுக்காகவும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப் படுதல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

20. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கு மிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பொருள் கோடல். **21.** இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப் படுத்தினாலன்றி –

"ஊழியர்" என்பது, தொழில்தருநர் ஒப்பந்தமொன்றில் ஈடுபட்டுள்ள ஆளொருவர் என்று பொருள்படும் அல்லது ஒருவருடனான ஒப்பந்தமானது அத்தகைய ஒப்பந்தம் எழுத்திலிருப்பினுஞ்சரி வேறுவகையாக விருப்பினுஞ்சரி அல்லது அது சேவை ஒப்பந்தம் ஒன்றாகவிருப்பினுஞ்சரி அல்லது தொழிற்பயிற்சி ஒப்பந்தம் ஒன்றாக இருப்பினுஞ்சரி அல்லது ஏதேனும் தொழிலாளரின் வேலையை நேரடியாக நிறைவேற்றுவதற்கான ஒப்பந்தமாயினுஞ்சரி ஏதேனும் தன்மையில் அவ்வொப்பந்தமொன்றில் ஈடுபடுகின்ற அல்லது வேலை செய்கின்ற எவரேனும் ஆள் என்று பொருள்படும் என்பதுடன் அத்தகைய ஆள் ஏதேனும் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் தொழிலிலிருப்பினுஞ்சரி இல்லாவிடினுஞ்சரி அத்தகைய ஒப்பந்தத்தின்கீழ், தொழிலுக்கமர்த்தப் பட்டுள்ள எவரேனும் ஆளையும் உள்ளடக்கும் ;

"உள்ளூரதிகார சபை" என்பது, ஏதேனும் மாநகர சபை, நகர சபை அல்லது ஏதேனும் பிரதேச சபை என்று பொருளாகும் என்பதுடன் அத்தகைய ஏதேனும் சபையினால் பிரயோகிக்கப்பட்ட, புரியப்பட்ட அத்துடன் நிறைவேற்றப்பட்ட தத்துவங்கள், கடமைகள், பணிகள் என்பனவற்றிற்கு நேரொத்த தாகவுள்ள அல்லது ஒத்ததாகவுள்ள தத்துவங்கள், கடமைகள், பணிகள் என்பனவற்றைப் பிரயோகிப் பதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் என ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட ஏதேனும் அதிகார சபையையும் உள்ளடக்கும் ;

"மாகாண சபை" என்பது, அரசியலமைப்பின் XVIIஅ என்னும் அத்தியாயத்தின்கீழ் தாபிக்கப்பட்ட சபை என்று பொருளாகும்.